# தேவி பாடம்

கொப்பியளோ பஞ்சநதீசா

கொப்பியளோ ப்ரணதார்த்தீசா

கொப்பியளோ ஜய தர்மஸம்வர்த்தினி

கொப்பிபாடுவோம் ஜய கொப்பியளோ

மிருகண்டுரிஷி பிள்ளை மார்க்கண்டேயமுனி

யாகம் பண்ணுகின்ற காலத்தினில்

மார்க்கண்டேயர் ஜய முனிவருக்குச் சொன்ன

மஹாதேவியுடைய மஹிமை எல்லாம் 1.

வியாச முனி பரீக்ஷித்துக்குச் சொன்ன

விச்வேச்வரி மஹிமை எல்லாம்

ஸூதமுனி சவுனகாதி கட்குச் சொன்ன

ஸ்ரீதேவியின் மஹிமை தன்னில் 2.

அறிந்த மட்டுக்கும் நானுரைப்பேன் இதில்

அக்ஷரப் பிழைகள் வராமல்

சேஷாத்திரி குருவைப் பணிந்தே மஹா

தேவி மஹிமை சொல்லத் துணிந்தேன். 3.

சரஸ்வதியும் கணேசரும் எந்தனுக்குத்

தந்தேன் பாக்கியம் என்று சொல்ல
சந்தோஷமான ஜயத்துடனே
ஸர்வேச்வரி மஹிமை உரைப்பேன் 4.

கதை வரலாறு
ஸூரதனென்ற ஓர் அரசன் தன்னுடைய
ஜகத்தை எல்லாம் ஆண்டிருந்தான்
தர்மா தர்மத்தை ஆராய்ந்து நல்ல
சாஸ்திரப்படிக்கு ஆண்டிருந்தான். 5.

அஸூயை யினாலொரு பகையரசன்
அவனை அடித்துத் துரத்திவிட்டான்
அதி சோகத்துடன் ராஜாவும் ஓர்
அடவி தனில் வந்து சஞ்சரித்தான் 6.

சமாதி என்கிற வைசியன் ஒருத்தன்
புத்திரருடன் விரோதப்பட்டுப்
பொறுக்கமாட்டாது கோமுட்டியும்
புறப்பட்டு வந்தான் வனத்தை நோக்கி. 7.

கோமுட்டியைக் கண்டு ராஜனுமப்போ
குசல ப்ரச்னம் கேட்டிடவே

அன்புடையாளுமென் புத்திராளும் மஹா
அவமானந் தன்னைப் பண்ணினார்கள் 8.

ஸஹிக்கமாட்டாதே நானுமிப்போ திந்தத்
தவ வனத்தினில் வந்தே னென்றான்
அவன் சொல்லி வந்த வார்த்தைகளைக் கேட்டு
ஆச்சரியப்பட்டு ராஜனப்போ; 9.

என்னுடைய வர்த்தமானந் தன்னை
எடுத்துரைப்பேன் நீர் கேளும்
சத்துருவால் ஒரு ராஜன் வந்து என்னை
சண்டை பண்ணி ஜயித்துவிட்டான் 10.

பாரியையுடனே புத்திராளையு மென்
பட்டணந் தன்னையும் நானிழந்தேன்
பந்து ஜனங்கள் தனையிழந்து இந்த
வேடர் வனத்தில் வந்தேனென்று; 11.

சொல்லிக்கொண்டு இருவருமாய்
ஸுமேதஸ் முனியைக் கண்டு பணிந்தாள்
திடபுத்தியாய் இருக்கும்பொழுதிந்தச்
சோகம் வந்து மறைப்பானேன். 12.

ஞானஸ்வரூபியே சொல்லுமென்று கேட்க
ராஜாவைப் பார்த்து முனியுஞ் சொல்வார்
பள்ளுப்பறை பதினாலு சாதிகட்கும்
ஈ: எறும்பு எண்பத்தி நான்கினுக்கும் 13.

எனது நானென்ற அபிமானம் ஜீவர்
எல்லாரிடமும் இருக்கின்றது
அஹங்காரம் பூர்ணமாயிருக்கும் போது
அஹம் பிரம்மம் நானென்கின்றீரே ! 14.

அக்ஞான மாயா மயக்கம் விலகிட
ஹரி ப்ரஹ்மாவாலும் கூடாது
அண்டம் பதினாலுலகம் முழுவதும்
அம்மன் மாய்கையினால் விளங்கும் 15.

ஸ்ரீ தேவி ஜகன்மாதாவினுடைய
திருஷ்டியினாலே விளங்கி நிற்கும்
தேவி மாயா வல்லப மென்றந்தச்
சுமேதஸ் முனியு முரைத்திடவே 16.

ஸ்ரீ தேவி யாரோ தெரியவில்லை என்று

திரும்பவும் ராஜன் கேட்கவுமே
ஸ்ரீ தேவி மஹிமை தன்னையப்போ
ஸுமேதஸ்  முனியும் உரைக்கலுற்றார் 17.

<u>மதுகைடபர் விருத்தாந்தம்</u>

திருப்பாற்கடல் தன்னில் ஸ்ரீஹரியும்
சேஷசயனத்தில் பள்ளி கொண்டார்
மஹாவிஷ்ணுவின் கர்ணங்களிலிருந்து
மதுகைடபர் இருவர் உண்டானார். 18.

விழித்துப் பார்த்தங்கே பிரம்மாவை அவர்கள்
முஷ்டியுத்தம் பண்ண வந்தெதிர்த்தார்
அயனுங்கண்டு பயந்து கொண்டு ஸ்ரீ
ஹரியை வந்து நமஸ்கரித்தார். 19.

நினைவு தெரியாது விஷ்ணுவுமப்போ
நித்திரையின் வசப்பட்டிருந்தார்
அம்மாதேவி நித்திராமோஹினியே பொல்லா
அஸுராள் பயத்தால் ஹரியிடம் வந்தேன். 20.

மோஹினியே ஜகன்மாதாவே மஹா
விஷ்ணுவை  விட்டு வெளியேரம்மா

(என்று) லோகமோஹினி மஹிமைதனைச் சொல்லி
நான்கு முகவரும் ஸ்தோத்தரிக்க, 21.

பகவானுடைய சரீரந்தனை விட்டுப் (தேவி)
பிரத்யக்ஷமாக எதிரில் வந்து
வேண்டும் வரத்தைக் கொடுத்துப் பிரம்மாவுக்கு
விச்வமோஹினியும் மறைந்தாள். 22.

மஹாவிஷ்ணுவும் எதிர் நின்ற பிரம்மாவை
வந்த காரியம் கேட்கலுற்றார்
(நீர்) யோக நித்திரை பண்ணுகின்ற போது
உம்முடைய கர்ணங்களிலிருந்து 23.

மதுகடைபர் என்றிரண்டு பொல்லாத
மஹா அஸுரர்கள் உண்டானார்
அந்த அஸுரரைக் கொல்ல வேண்டுமென்று
ஹரியைப் பிரம்மன் நமஸ்கரித்தார். 24.

ஆகட்டும் அப்படியே ஸம்ஹரிப்போமென்று
அனுப்பி வைத்தார் பிரம்மாவை
மஹாவிஷ்ணுவுடன் யுத்தம் பண்ணப் பொல்லா
மதுகடைபர் வந்தெதிர்த்தார் 25.

ஹரியுடனே அஸுரர்கள்   இருவரும்

அநேகங் காலம் யுத்தஞ் செய்தும்

ஹரியும் ஜயிக்க முடியாமல் அந்த

அஸுரர்களைப் பார்த்து ஸந்தோஷமாய், 26.

அஸுரர்களே உங்களுக்கு எம்மால்

ஆன  வரத்தைத் தருவோமென்றார்

ஆன  வரத்தைத் தருவோமென்றவுடன்

அஸுராளும் அதிகோபத்துடன், 27.

விஷ்ணுவைப் பார்த்தாவாள் கர்வத்துடன் உமக்கு

வேண்டும் வரத்தை நாம் தருவோமென்றார் !

உங்கள்   இருவரையும் ஸம்ஹரித்திட

ஒருவரம்   எனக்கு வேண்டுமென்றார். 28.

வஞ்சித்தார் நம்மை மஹாவிஷ்ணுவுமிப்போ

வார்த்தை இரண்டு சொல்ல லாகாதென்று

சரிக்குச்சரி நாமும் ஆக வேணுமென்று

சக்கரத்தாருடன் ஏது சொல்வார் 29.

அப்பு இல்லாத ஸ்தலந்தனில் எங்களைப்

ப்ருதிவியில் வைத்துக் கொல்லுமென்றார்
தன்னுடைய தொடைதனில் வைத்துமே
ஸம்ஹரித்தாரப்போ அஸுரர்களை. 30.

அஸுராளுடைய தேகங்கள் தானிப்போ
அவனியாக இதோ விளங்குவது
ராஜேச்வரி மஹிமைகள் தான் சொல்ல
நான்முகராலும் முடியாது. 31.

<u>மஹிஷாஸுரன் விருத்தாந்தம்</u>

மஹிஷ அஸுரன் என்னும் ஒருத்தன்
தபஸு மிகப் பண்ணி வரமடைந்தான்
ஜகத்தில் உள்ளோரை உபத்திரவிக்க அஸுரன்
தேவர்கள் ரிஷிகள் எல்லோரும் கூடி , 32.

கைலாசத்திற்கு ஓடிவந்தெல்லோரும்
அறிவித்தாள் மஹாதேவருக்கும்
சிவனுடைய ஸன்னிதியில் நின்று
தேவிமஹிமை சொல்லி ஸ்துதித்தாள். 33.

தேவாளுடைய முகத்திலிருந்தம்மன்
தேஜோரூபமாய் ஒன்று சேர்ந்து

அத்தனை பேர்களின் தேஜஸைக் கிரஹித்து
அம்மன் பிரத்தியக்ஷமாக வந்தாள். 34.

அத்தனை தேவர்களும் பணிந்து தங்கள்
ஆயுதமும் தேவி கைகொடுத்தாள்
பக்தியாய் ஆயுதமும் கொடுக்க அம்மன்
பதினெட்டுக் கையிலும் தரித்துக்கொண்டு, 35.

ஸிம்ஹவாஹனத்தில் ஏறிக்கொண்டாள் மஹா
தேவியும் யுத்தம் பண்ணவந்தாள்
மஹிஷாஸுரனும் தேவியுமாய் மஹா
ஆங்காரமாய் யுத்தம் பண்ணலுற்றார். 36.

அநேக காலம் மஹிஷன் தேவியுடன்
அஞ்சாமலே யுத்தம் செய்து நின்றான்
மாய்கையினால் பல ரூபமெடுத்தவன்
மஹாதேவியுடன் யுத்தம் செய்தான். 37.

காளிரூபம் எடுத்துக்கொண்டு தேவி
கைதனில் சக்ராயுதமும் கொண்டு
மஹிஷரூபம் எடுக்கும் போதவனை
மடிய வெட்டினாள் மாதேவியும், 38.

காமாக்ஷி தேவியும் ஸந்தோஷமாய் அந்தக்

காளிதேவியைக் கண்டுகந்து

மஹிஷாஸுர மர்த்தினி என்றப்போ

மஹாதேவியும் தான் அழைத்தாள் 39.

மஹிஷாஸுரனை ஸம்ஹரித்த எங்கள்

மஹாதேவியே நமஸ்காரம்

மனஸ்தாபம் போக்கி நாடுகள் தந்த

மஹேச்வரியே நமஸ்காரம். 40.

அண்டத்திற்கெல்லாம் அதிபதியே

ஜகதாம்பிகையே நமஸ்காரம்

அபயமென்றோரை ரக்ஷித்திடும்

அம்மா உனக்கு நமஸ்காரம் 41.

பிரணவமயமான பார்வதியே

பரதேவதையே நமஸ்காரம்

சுத்தஸ்வரூப ஸுந்தரியே சிவ

காமவல்லியே நமஸ்காரம் 42.

ஞானஸ்வரூபியே கல்யாணியே

ஸ்ரீமந் நாராயணியே நமஸ்காரம்

சாந்தரூப சரீரிணியே சிவ

சங்கரியே நமஸ்காரம் (என்று) 43.

தேவரெல்லோரும் ஸ்துதிக்கவுமே

(மஹா) தேவியும் கேட்டதி சந்தோஷமாய்

வேணும் வரங்களைக் கேளும் தரோமென்று

தேவநாயகி சொல்லவுமே 44.

ஆபத்துக்கள் ஒன்றும் வராமலே எங்கள்

அம்மா வந்து நீ ரக்ஷிக்க வேணும்

ஆகட்டும் என்று விடையளித்து ஜக

தம்மனும் அந்தர்த்தானம் அடைந்தாள் 45.

<u>சும்பன் நிசும்பன் விருத்தாந்தம்</u>

அதற்குப்பின் சில காலத்தினில் பொல்லா

அஸுரர் இரண்டு பேர் உண்டானார்

அந்த அஸுராளை ஸம்ஹரித்த ஜக

தம்பிகையின் மஹிமை சொல்லுவேன். 46.

சும்பன் நிசும்பன் என்றிரண்டு பொல்லா

சூரர்கள் அப்போ உண்டானார்கள்

பால்ய வயதில் தபஸு பண்ணி அவர்
வரங்கள் வேணதெல்லாம் அடைந்தார். 47.

இந்திரனுடனே தேவர்கள் பிரம்மனை
எல்லோரையும் அடித்துத் துரத்தி
ஸமஸ்தலோகம் நடுங்கிடச் செய்து
சங்கையில்லாமலே ஆண்டிருந்தார். 48.

நடுங்கிப் போயந்தத் தேவர்களெல்லாம்
நமக்குப் பொல்லாத காலமென்று
வெவ்வேறு ரூபம் எடுத்துக்கொண்டு தேவாள்
பூலோகத்தில் வந்து ஸஞ்சரித்தார். 49.

நாற்பத்தோரு சதுர்யுகமாய்த் தேவர்
ராஜ்ஜியம் தன்னை இழந்திருந்தார்
விமோசனம் ஒன்றையும் காணோமே என்று
விஷ்ணு உலகத்திற்கு ஓடி வந்தாள் 50.

நடுங்கி வந்தீர்கள் தேவர்களே இப்போ
நம்மால் இதற்கொன்றும் ஆகாது
விஷ்ணுமூர்த்தியும் தேவரும் இந்திரனும்
விரிஞ்ச மூர்த்தியும் கூடிக்கொண்டு, 51.

மஹாமேரு பர்வதச் சாரலிலே
வந்து பிரம்மாதி தேவரெல்லாம்,
இதற்கு நாமென்ன செய்யப்போறோ மென்று
ஏக்கமடைந்தார் அமராளெல்லாம். 52.

புத்தியுள்ள ஒரு தேவனப்போ எண்ணி
பூர்வத்தில் தேவியும் சொன்னாரே
இடுக்கண் வந்திட்ட வேளையினிலே
என்னை ஸ்துதியுங்கள் என்றாரே. 53.

ஆமாம் அதுவும் உள்ளதென் றெண்ணியே
அமராள் எல்லாரும் கூடிக்கொண்டு
நமஸ்தே நமஸ்தே என்று சொல்லியப்போ
ராஜேச்வரியை ஸ்தோத்தரித்தார். 54.

மூலாதாரி ஸரஸ்வதியே ஜகன்
மோஹினியே நமஸ்காரம்
மாயாதாரியே லக்ஷுமியே
மஹேச்வரியே நமஸ்காரம். 55.

பகவான் தேஹத்தில் பாதியன்றோ

எங்கள் பார்வதியே நமஸ்காரம்

எங்களை ரக்ஷிக்க வேண்டுமிப்போ ஜக

தீச்வரியே நமஸ்காரம் என்று, 56.

தேவர் எல்லாருமாய் ஸ்தோத்தரிக்கத்

தேவியும் பிரத்யக்ஷமாக வந்து

அஞ்சாதேயுங்கள் நீங்களென்று அபய-

ஹஸ்தம் கொடுத்தாள் தேவருக்கு. 57.

ஹிமய பர்வதம் தன்னில் வந்து தேவி

கன்னிகா ரூபம் எடுத்துக்கொண்டு

கோகிலம் போலும் குரலுடையாள்

கொம்புத்தேன் போலும் மொழியுடையாள் 58.

ஹம்ஸம் போலும் நடையுடையாள்

அபயம் கொடுக்கும் கரமுடையாள்

மன்மதன் கைக்கொண்ட விற்போலுமுள்ள

வளைந்த புருவச் சிலையழகும், 59.

முத்துக்கோத்தாற்போல் பல்லொளியும்

பவழம் போன்ற அதரங்களும்

பட்டமும் சுட்டியும் நெற்றி தன்னில் மின்ன

பதக்கம் சரப்பளி மார்பில் அசைய 60.

தண்டை சிலம்பு கலகலவென்னக் காலில்
சிலம்பு கொஞ்சிச் சலுஞ்சலென்க
சொர்ணமயமான ஊஞ்சலில் இருந்து
கோடி சூரியர் உதித்தது போல், 61.

தங்கத்தினாலான சங்கிலியைத் தொட்டு
தானே பாடிக்கொண்டு ஆடலுற்றாள்
சண்டமுண்டரென்ற இரண்டஸுரர்கள்
(தேவி) கானந்தன்னைத் கேட்டு ஓடிவந்து, 62.

தண்டைசிலம்பு கலகலவென்னக் காலில்
சேதியொன்று எடுத்துரைப்பாள்
எங்கள் ராஜாவின் ப்ரதாபங்கள் தன்னை
இத்தனை நாளிலும் கேட்டிலையோ? 63.

சும்பன் நிசும்பன் என்றிரண்டு பேர்கள்
மூன்று உலகமும் ஆண்டிருக்காள்
உமக்கு மெத்த அழகிருந்து மிப்போ
போக பாக்கியம் புஜியாமல், 64.

அதிசயமான ரூபத்துடன் நீரும்
தனித்திருக்கின்ற காரியமேன்
எங்கள் ராஜனுக்கே ஏர்வையம்மா நீர்
இந்த க்ஷணத்தில் வாருமம்மா ! 65.

வாரும் என்றஸூரன் சொல்லவுமே
மஹேச்வரியும் எடுத்துரைப்பாள்
ஸ்திரீ புத்திக்கு ஸ்திரமில்லையே நான்
தெரியாமலே ஒன்று செய்துவிட்டேன். 66.

பிரதிக்ஞை ஒன்று செய்துகொண்டேன் என்
பர்த்தாவாய் வர வேணுமென்றால்
யுத்தம் பண்ணியே என்னை ஜயித்தவர்
எனக்கிஷ்ட மாகிய பர்த்தாவென்று, 67.

உங்கள் ராஜாவுக்குச் சொல்லுங்கள் என்றம்மன்
உத்தரஞ்சொல்லி அனுப்பி வைத்தாள்
சண்டமுண்டரும் ஓடிவந்தார் அந்தச்
சும்ப நிசும்பர் அண்டையினில் 68.

உச்சிதமாகின்ற ரத்தினங்கள்
உங்களிடத்தில் இருந்தாலும்

சேர்க்க வேண்டிய இரத்தினங்களில்
ஸ்திரீ ரத்தினம் உங்களுக் கில்லையே ! 69.

ஏற்றமானதோர் கன்னிகா ரத்தினம்
ஹிமய பருவதத்தில் இருக்காள்
ஸஹாயமாகப் புருஷர்களும் இல்லை
தனித்திருக்காள் ஸகியுடனே 70.

சண்டமுண்டரும் சொல்லவுமே
சும்பாஸுரன் கேட்டு ஸந்தோஷமாய்
சும்பம் மகிழ்ந்து தன் மந்திரியான
சுக்கிரீவன் தன்னைக் கிட்டழைத்து 71.

என்மஹிமைகளை அவளுக்குரைத்து (நல்ல)
இஷ்டமாகிய வார்த்தை சொல்லி
வார்த்தை சொல்லி வசமாக்கிக் கொண்டு
வாருமென்று அனுப்பி வைத்தான். 72.

சுக்கிரீவன் கேட்டு ஸந்தோஷமாய் வெகு
சீக்கிரமாகவே ஓடிவந்தான்
தேவியருகினில் கிட்ட வந்து மெள்ளச்
சேதியை நன்றாய் எடுத்துரைப்பான். 73.

எங்கள் ராஜாவின் சேதி ப்ரதாபங்கள்
வந்தவர்கள் இங்கே சொல்லலையோ
சும்ப நிசும்பன் என்று இரண்டு பேர்
மூன்றுலகம் கட்டி ஆண்டிருக்கார். 74.

உமக்கு மெத்த அழகிருந்தும் நல்ல
போக பாக்கியம் புஜியாமல்
இந்த அதிரூப ஸவுந்தரியத்துடன்
தனித்திருக்கின்ற காரியமேன்? 75.

எங்கள் ராஜாவிற்கு ஏர்வையம்மா நீர்
இந்த க்ஷணத்தினில் வாருமென்றான்
வாருமென்று அழைக்கவுமே அவன்
மஹேச்வரியும் ஏது சொல்வாள். 76.

சபதம் ஒன்றல்லவோ செய்திருக்கேன்
சத்தியமாகவே சொல்லுகிறேன்
சண்டையிட்டு என்னை ஜயித்தவர்கள்
கொண்டு போகலாமென்று சொல்லி, 77.

உங்கள் ராஜாவிற்குச் சொல்லுங்கள் என்று

உத்தரஞ்சொல்லி அனுப்பி வைத்தாள்
சுக்கிரீவன் கேட்டுக் கோபத்துடன்
சும்பாஸூரன் கிட்டவந்து சொன்னான். 78.

சும்பாஸூரன் கேட்டுக் கோபத்துடன்
தூம்ரலோசனனைக் கிட்டழைத்து
நய பயமாய் அவளுக்குச் சொல்லி
நம் மஹிமை எடுத்துரைத்து, 79.

(இந்தச்) சேதியொன்றையுங் கேட்காவிட்டால்
சிட்சை பண்ணிக் கொண்டு வாருமென்றான்
தூம்ரலோசனன் கேட்டு ஸந்தோஷமாய்த்
துரிதமுடன் தேவி கிட்டவந்து, 80.

ஏனம்மா இந்த அக்ரமம் உனக்கு
எங்கள் இராஜ ரிடத்தினிலே
சேராதே போனால் உம்மையிப்போ நான்
சிட்சை பண்ணுவேன் என்று சொல்லி, 81.

அதட்டியே சில வார்த்தை சொல்லியவன்
இழுக்க வந்திட்டான் அம்மனையும்
பார்த்து அம்மனும் ஹூங்காரம் பண்ணவே

பஸ்பமாகவே எரிந்து போனான். 82.

தூம்ரலோசனன் பட்டுப்போனானென்று
தூதர்கள் ஓடிச் சொன்னாருடனே
மந்திரியும் பட்டுப் போனான் என்றவுடன்
மண்டியெரிந்து கண்கள் சிவந்து, 83.

சண்டமுண்டரைக் கிட்டழைத்து நீங்கள்
ஸம்ஹரித்திங்கே வாருமென்றான்
சண்டமுண்டரும் ஓடிவந்து அந்தச்
சங்கரி தேவியை வந்தெதிர்த்தார். 84.

கண்டு தேவிதன் கோபத்தினாலே
காளிதேவியை உண்டாக்கினாள் (அவள்)
சண்டமுண்டர் தலையை வெட்டிச்சிவ
சங்கரி தேவிமுன் வைத்து நின்றாள். 85.

சங்கரி அம்மனும் ஸந்தோஷமாயப்போ
சாமுண்டி என்றபேர் தான் கொடுத்தாள்
தேவர்கள் எல்லாருங் கூடிக்கொண்டு மஹா
தேவிக்குப் புஷ்பமலர் சொரிந்தார். 86.

சண்டமுண்டரும் பட்டாரென்று கேட்டு
சர்ப்பம் போலே அவன் சீறிக்கொண்டு
தனக்குண்டானதோர் சேனைக்கெல்லாம் அப்போ
அரைக்கணத்தில் ஆணையிட்டான். 87.

எண்பத்து நாலாயிரம் சேனைகளும்
இமைப்பொழுதினில் கூட்டிவைத்தான்
அதிபலவானான இரத்தபீஜன் தன்னை
அம்பிகை முன்னால் அனுப்பிவைத்தான். 88.

ஸகல தேவர்கள் அம்சங்களும் சேர்ந்து
ஸப்தமாதர்கள் உண்டானாள்
நாராயணி நாரஸிம்ஹி என்றும்
வைஷ்ணவி மஹாதேவி என்றும், 89.

பிரஹ்மாணி, கௌமாரி என்றும்
காளி சாமுண்டி தேவி என்றும்
ஈச்வரியுடைய தோழிகளாகவே
ஏழு பெண்டுகள் கூடிக்கொண்டு, 90.

ரத்த பீஜனுடன் யுத்தம் பண்ணும்போது
ரத்தம் கீழே விழுந்ததப்போ

பிந்துவுக்குப் பிந்து இரத்தபீஜனாகப்
பூமியெங்கிலும் முளைக்கலானான். 91.

அம்பிகையுடைய ஆக்ஞையினால் மஹா
அட்டகாஸத்துடன் காளிதேவி
இரத்தபீஜனை ஸம்ஹரித்து அவன்
இரத்தமெல்லாம் உறிஞ்சிவிட்டாள். 92.

காளிதேவியும் இரத்தபீஜர்களை
வாரி வாரி விழுங்கிவிட்டாள்
இரத்தபீஜனும் பட்டவுடன் பொல்லா
நிசும்பனும் பார்த்துக் கோபத்துடன், 93.

ஸம்ஹரிப்பேன் இவளை என்று சொல்லி
சபதம் செய்து தமையன் முன்னே
தேவியுடன் எதிர்த்து நிசும்பனும்
தோற்காமலே யுத்தம் செய்து நின்றான் 94.

ஆயிரமாயிரம் அம்பு தொடுத்தவன்
அஞ்சாமலே யுத்தம் பண்ணலுற்றான்
நேரேயுத்தம் பண்ணி லீலாவினோதமாய்
நிசும்பனைக் கொன்றாள் ஸ்ரீதேவியும். 95.

தம்பியும் பட்டதைக் கேட்டுச் சும்பாஸுரன்
சங்கையில்லாத கோபத்துடன்
அம்பிகை யெதிரில் வந்து சும்பாஸுரன்
ஆங்காரத்துடன் ஏது சொல்வான் 96.

யுத்தம் பண்ணத் தெரிந்தவளே எங்கள்
இத்தனை பேரையும் ஏய்த்தாயேடி நீயும்
யாருமில்லாதே இருந்தாயேடி நீயும்
ஏழுபேருடன் இப்போ நின்றாயடி 97.

என் அளவில்லா சேனைகளுக்கெல்லாம்
அனலாக வந்து நின்றாயடி
(என்) சங்கையில்லாத சேனைகளுக்கெல்லாம்
சதிகாரியாக நீ வந்தாயடி. 98.

சதிகாரியடி நீயுமிப்போ என்னை
சற்பனை செய்யவே வந்தாயடி
வஞ்சித்தாயடி நீயுமென்னை யிப்போ
வார்த்தைகள் இரண்டு சொன்னாயடி . 99.

ஒருத்தியாக இருந்து கொண்டன்றோ நீ

உத்தரஞ்சொல்லி அனுப்பிவைத்தாய்
அத்தனைபேர்களைச் சேர்த்துக்கொண்டு இப்போ
அதட்டுகிறாயடி நீயுமென்னை. 100.

உன் அழகான உருவத்தைக் கண்டபின்
அமர்புரிய என் கை எழுமோ
துரத்தி எல்லோரையும் காளியை என்னுடன்
தொந்தயுத்தம் பண்ணச் சொல்வாய் என்றான். 101.

சும்பன் வார்த்தையைக் கேட்டு ஸகிகளே
இங்கே வாருங்கள் என்றழைத்து
வாரி அணைத்தாள் ஸகிகள் எல்லோரையும்
மாரோடு மறைத்து ஐக்கியமானாள் 102.

இரண்டாம் பேரிங்கில்லை காளியுடன் நீ
எதிர்த்து யுத்தமும் பண்ணு என்றாள்
அம்மன் செயலையும் வார்த்தையையும் கேட்டு
அம்பு பட்டாப்போலும் தான் உருகி, 103.

சும்பாஸுரனும் காளிகாதேவியும்
தோற்காமலே யுத்தம் பண்ணலுற்றார்
அடித்த பந்து கிளம்பினாற் போலவன்

ஆகாயத்தினிலே கிளம்பி, 104.

ஒருவருக்கொருவர் சளையாமல் அங்கு
ஓடோடி யுத்தமும் பண்ணினார்கள்
சும்பாஸுரனும் காளிகாதேவியும்
தொந்தயுத்தமும் பண்ணினார்கள் 105.

தேவர்களெல்லாம் பயத்துடனே மஹா
தேவியை ஸ்துதித்துக் கொண்டிருந்தார்கள்
எத்தனை பொழுதாக யுத்தம் பண்ணுவோம்
என்று காளியும் கோபத்துடன், 106.

சும்பாஸுரனை வதைத்தாள் காளியும்
துர்காதேவி என்றம்மனை அழைத்தாள்
துர்காதேவியம்மன் அஸுரனை வதைக்கத்
தேவர்கள் புஷ்பமழை சொரிந்தார். 107.

அத்தனை தேவர்களும் கூடி ஜக
தம்பிகை தன்னை ஸ்துதிக்கலானார்
சும்ப நிசும்பரை ஸம்ஹரித்த எங்கள்
துர்காதேவிக்கு நமஸ்காரம் 108.

துக்கம் போக்கியே நாடுதந்த எங்கள்

தேவியே உமக்கு நமஸ்காரம்

சண்டமுண்டனை ஸம்ஹரித்த எங்கள்

துர்காதேவிக்கு நமஸ்காரம் 109.

ரத்தபீஜனை ஸம்ஹரித்த எங்கள்

பத்திரகாளியே நமஸ்காரம் (என்று)

பக்தியாய்த் தேவர் பணிந்து ஸ்துதித்திடப்

(பர) தேவியும் பார்த்து சந்தோஷமானாள். 110.

<u>தேவியைப் பூஜித்து ஸ்துதித்தவர்கள் அடையும் பலனை விவரித்தல்</u>

ஆபத்துகள் ஒன்றும் வாராது

அன்புடன் இதைப் படித்தவர்க்கு

பேய்பிசாசுகள் அண்டாதவர்களுக்குப்

புத்திர சோகம் அனுபவியார். 111.

தரித்திரங்கள் அனுபவியார்

தீர்க்காயுசையும் நான் கொடுப்பேன்

புத்திரஸம்பத்தும் நான் கொடுப்பேன் பர

தேவதை பக்தியைச் செய்த பேர்க்கு 112.

விப்ரர்கள் இதைக் கேட்டுவிட்டால்

வேத சாஸ்திரம் விருத்தியாகும்

க்ஷத்திரியர்கள் இதைக் கேட்டுவிட்டால்

ஜயத்துடனே அரசாள்வர் 113.

வைசியர்கள் இதைக் கேட்டுவிட்டால்

வியாபாரத்தில் வெகு லாபம் உண்டாம்

சூத்திரர்கள் இதைக் கேட்டுவிட்டால் நல்ல

ஜயமடைவார் கிருஷித் தொழிலில். 114.

ஸ்திரீகள் பக்தியுடனே படித்தாலிதைத்

தீர்க்க ஸுமங்கலியாய் இருப்பாள்

கன்னியாப் பெண்களிதைப் படித்தால் நல்ல

கணவர் தன்னை அடைந்திடுவாள். 115.

நவராத்திரியில் தவறாமல் பூஜித்தால்

ராஜேச்வரியின் கிருபை அடைவார்

பஞ்சபாவங்களில் பக்தியாய்ப் பூஜித்தால்

பரதேவியின் பதம் அடைவார். 116.

நித்தியமாக ஸ்துதித்தவர்களுக்கு

நினைத்தவரமும் நான் கொடுப்பேன்

வெள்ளி செவ்வாயில் ஸ்துதித்தவர்களுக்கு

வேண்டும் வரங்கள் கொடுத்திடுவேன் 117.

மனதிலுள்ள அபீஷ்டங்கள் எல்லாம்
வருந்தும் உங்கட்குத் தருவோமென்றாள்
தருவேன் என்றம்மன் சொல்லவுமே அந்தத்
தேவர்களெல்லாம் மனமகிழ்ந்து, 118.

ஒருக்காலும் ஆபத்து வந்திடாமல்
உகந்து ரக்ஷிக்க வேணுமம்மா
உகந்து ரக்ஷிக்க வேணுமென்றவுடன்
உலகநாயகி ஏது சொல்வாள் 119.

அநேககாலம் கழிந்தவுடன் பொல்லா
அஸுரர் மிகவும் உபத்திரவிப்பான்
நந்தகோபர் அரண்மனை தன்னில்
கண்ணனாய்ப் பிறந்து ரக்ஷிக்கிறேன். 120.

பாரத மாதாவாய் ராஜ்யங்களெல்லாம்
பரிபாலித்து நான் ரக்ஷிக்கிறேன்
ஆறுதல் சொல்லியே தேவர் எல்லோருக்கும்
அம்பிகை அந்தர்த்தான மடைந்தாள் 121.

## <u>சுரதனென்ற ராஜனும் சாமதி என்ற கோமுட்டியும் தேவியைப் பூஜித்துப் பலனடைதல்</u>

வைசியனும் மஹாராஜாவும் தேவியின்
மஹிமை கேட்டு மனமகிழ்ந்து
தவமுனிவர் ஆக்ஞையினால் ஜகத்
தம்மனை நோக்கித் தபஸு செய்ய 122.

சையபருவதச் சாரலிலே வந்தார்
சாமதியுடனே இராஜனப்போ
இந்திரியங்களுடன் வாயுவையும்
எல்லாவற்றையும் உள்ளடக்கி, 123.

அம்மனை நோக்கி இருவருமாய்
அநேகங்காலம் தவமிருந்தாள்
தபஸைக் கண்டதில் ஸந்தோஷமாய்ச்
சங்கரியுமவள் முன்னே வந்தாள் 124.

என்ன வரம்வேணுமென்று அரசனை
ஈ:ச்வரி தேவியும் கேட்கவுமே
எந்தனுடையதோர் நாடு ராஜ்ஜியங்களும்
எப்போதும் போலவே வேண்டுமென்றார். 125.

ராஜ்ஜியத்தை அடைவாய் என்றம்மன்
ராஜாவைப் பார்த்து வரம் கொடுத்து
அம்மன் அறுபதினாயிரம் ராஜ்ஜியத்தை
யாண்டு அவதரிப்பாய் மநுவாக. 126.

ராஜாவைப் பார்த்து வரங்கொடுத்து அம்மன்
சாமதியைப் பார்த்துக் கேளு மென்றாள்
(உங்கள்) ஐக்கியம் ஒன்றுமே போதுமம்மா
உம்முடைய கிருபை வேணுமம்மா. 127.

அப்படியே உந்தன் சித்தம் துலங்கியே
ஆத்மக்கியானம் அடைந்திடுவாய்
ஜீவன் முக்தி அடைந்திடுவாய் என்று
தேவியும் அந்தர்த்தானம் அடைந்தாள். 128.

ராஜனும் தேவிகிருபை அடைந்து தன்
ராஜ்ஜியம் அடைந்து ஆண்டிருந்தான்
ஸுமேதஸ் முனியின் ஆசிரமத்தில்
சாமதியும் ஞானவானாய் இருந்தான். 129.

தேவி பாகவத புராணத்திலுள்ள
சிறந்த ஐந்தாம் ஸ்காந்தமிதை

துஷ்ட அஸுரரை ஸம்ஹரித்த இந்தத்
தேவி மஹிமை படித்தவர்கள், 130.

அன்புடன் தேவி மஹிமை தன்னைச் சொல்லி
அநுதினமும் ஸ்துதித்தவர்கள்
அம்பிகை பாதாரவிந்தத்திலே அவர்
ஐக்கியப் பதமடைந்திடுவார் ! 131.

<u>மங்களம்</u>

மங்களம் ஜய மங்களம் ஜய மஹா தேவிக்கு
மங்களம் லலிதாதேவியுடன் மஹாகாளிக்கு
சங்கு சக்கரம் கையில் தரித்த - சக்ர நாதைக்கு
சங்கையில்லாத அஸுராளைக் கொன்ற சாமுண்டி தேவிக்கு 132.

துஷ்ட அஸுராளை ஜயித்த துர்க்காதேவிக்கு
சிஷ்டர்களான தேவரைக் காத்த ரத்தாம்பாளுக்கு
இஷ்டதெய்வமாம் எங்களை ரக்ஷிக்கும் - எமஸ்வரூபிக்கு
கஷ்டம் நீக்கிக் கருணை பொழியும் காமாக்ஷி தேவிக்கு 133.

அஷ்டபோக பாக்கியமளிக்கும் ஆதி சக்திக்கு
துஷ்ட பண்டாஸுரனை வதைத்த ஸ்ரீ லலிதைக்கு
ஸகலதேவ ஸ்வரூபியான சக்தி கௌரிக்கு

அகிலலோகத்தைப் பரிபாலித்திடும் அம்பாதேவிக்கு 134.

வாழ்க தேவி நாமம் வாழ்க மறைகள் வாழ்க வாழ்கவே

வாழ்க மானிடர் வாழ்க ஆவினம் - வாழ்க வளமையாகவே !

பக்தருக்கருள் பொழியும் ஸ்ரீ - பரதேவி வாழ்கவே!

அத்யந்த பக்தியுடனே படிக்கும் அன்பர் வாழ்கவே !! 135.

ஸ்ரீ தேவி பாடம் நிறைவுற்றது